[8th March 1968

திரு. எம். எத்திராஜுலு : சென்னையில் சிம்சன் தொழிற்சாலையில் இரு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவைகளுக்கிடையே மோதல் ஏற்பட்டு, இரண்டு பேர்களுக்கு கத்திக் குத்தும், 26 பேர்களுக்கு காயமும் ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுக்கு மனுவும் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது போலீசாரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

MR. CHAIRMAN : I think the Hon. Minister, need not answer it.

Power from Neyveli.

* 214 Q—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(a) the reasons to why the Medras state is not fully whilising the power from Neyveli.

(b) the price at which the Neyveli power is bought by the State and;

(c) whether it is a fact that the price which the Madras State pays is very low and that the Government of India inours a loss as a result there of ?

நெய்வேலி மின்சாரம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டு கிறேன் :—

(அ) நெய்வேலி மின்சாரத்தை நாம் பூரணமாக பயன்படுத்தாது காரணம் என்ன ?

(இ) நெய்வேலி மின்சாரத்தை நாம் என்ன விலைக்கு வாங்கு கின்றோம் ?

(உ) நாம் கொடுக்கும் விலை குறைவானதென்பதும் அதனால் மத்திய அரசுக்கு நட்டம் என்று கூறப்படுவதும் சரியா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) கடந்த தென் மேற்குப் பருவத்தில் நீர் கொள் பகுதிகளில் பொதுவாக மன நிறைவு அளிக்கும் வகையில் மழை பெய்தது. இதனால் நீர்வரவு கணிசமாயிருந் தது. நீலகிரியிலிருந்து பெருகி வழிந்தோடிய நீரும், பெரியாறு, பாப நாசம், மேட்டூர் சர்க்கார்பதி ஆகிய இடங்களில் கட்டாயமாகப் பாசனத் திற்கு விடப்படும் நீரும், மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப் பட்டன. நல்ல மழை பெய்ததால், வேளாண்மை விசையேற்றங் களுக்காகப் பயன்படுத்தும் மின் சக்தியின் அளவும் குறைந்துவிட்டது. எனவே 1967 ஜூலையிலிருந்து ஆகஸ்ட் வரையில் நாம் நெய்வேலி மின் சக்தியை முழு அளவில் பயன் படுத்தவில்லை. நெய்வேலியிலிருந்து திங்கள் தோறும் ஓரளவு மின்சக்தியை உறுதியாகப் பெற மாநில மின்சார வாரியம் இப்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷனுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளது.

(இ) ஒரு அலகு (Unit) 5.2 காசு.

(உ) மின் சக்தித் துறையில் 1966–67-ல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன் தெரிவித்துள்ளது. வாங்கும் விலையை மாற்றியமைப்பது குறித்துத் தமிழ்நாடு அரசாங்கம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்பொரேஷன், மாநில மின்சார வாரியம் ஆகியோர் விவாதித்து வருகின்றனர்.

8th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, நாம் வாங்கும் விலையைக் காட்டிலும், அதிகமாக அவர்கள் தமிழகத்திற்கு சப்ளை செய்யும்போது, என்ன சார்ஜ் செய்கிறார்கள் ? அவர்கள் எவ்வளவு மொத்தம் உற்பத்தி செய்கிறார்கள். ? நாம் எவ்வளவு வாங்குகிறோம் ? எவ்வளவு வாங்காமல் மீதமிருக்கிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போது 300 மெகவாட்டிலிருந்து 400 மெகவாட்டிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து 150 மெ. வா. அவர்களுக்குரிய தர்மல் ஸ்டேஷனிலிருந்து பெர்டிலைசருக்குப் போக, 150 மெ. வா. வாங்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இங்குள்ள நிலைமைக்கு ஏற்ப நமக்கு சாதகமாகக் குறைத்துக்கொண்டார்கள். ஆனால் நெய்வேலி நம்மை நம்பி இருப்பதால், அங்கிருந்து நாம் எடுத்துக்கொள்ளாவிட்டால், வேறு யாரும் அதை எடுக்கும் நிலையிலில்லை. ஆகையால் நாம் நம்முடைய இயங்காத நிலையில் வேண்டுமென்றால் சிலவற்றை நிறுத்திக்கொள்ளலாம் என்று ஒப்பந்தம் செய்துகொண்டு, செப்டெம்பர் 1967-ல் 36 மெகவாட் யூனிட் வாங்கினால் போதும் என்றும் மறுபடியும் 110 அங்கிருந்து வாங்குவது என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி 110 மெகவாட் செப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் அவற்றை வாங்குவது என்றும், அதற்குப் பிறகு 150 மெகவாட் வாங்கலாம் என்றும், செலவு போக மீதமாவதை நாம் வாங்கும் முயற்சி இப்போதிருக்கிறது. 1969-ல் ஏப்ரலில் 500 மெகவாட் திறனுக்கு உயரக்கூடும். செப்டெம்பர் 600-க்கு உயரக்கூடும். மிச்சப்படுவதை நாம் வாங்கும் நிலையிலிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : நெய்வேலியிலிருந்து வாங்கும் மின் சக்திக்கு யூனிட்டுக்கு 5·2 காசு வீதம் கேட்பதாகச் சொன்னார்கள். நமது அனல் மின்சார நிலையங்களிலும் நமது நீர் மின்சார நிலையங்களிலும் உற்பத்தி செய்யப்படும் மின் சக்திக்கு ஒரு யூனிட் என்ன விலை அடங்குகிறது? மைசூரிலிருந்து வாங்கும் மின்சக்தி என்ன விலை ? நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சக்தி விலை குறைவாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : நெய்வேலியிலிருந்து வாங்குவது கொஞ்சம் கூட இருப்பதால் நமக்குத் கிட்டத்தட்ட 4·4 சில்லறை ஆகிறது. மைசூரிலிருந்து ஒரு மிலியன் யூனிட்டு அளவுக்கு 5 காசு என்றும், ஒரு மிலியனுக்கு மேல் 4½ காசு என்றும் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அவை கிடைத்தால் இங்கே நிலக்கரியை மிச்சப்படுத்தலாம் என்று வாங்கப்படுகிறது. 5·2 காசுக்கு இருந்தாலும், நெய்வேலியில் உற்பத்திக்கு, செலவு அதிகமாக இருப்பதால் இவர்கள் விலை 7.00 சில்லறை காசுக்கு கூட்டவேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். அரசாங்கத்தாரும் மின்சார வாரியத்தாரும் நெய்வேலி கார்ப்பொரேஷனுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார்கள். இரண்டு பேருக்கும் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிக்கவேண்டுமென்று தான் விருப்பம். நெய்வேலி நம்மை நம்பித்தான் இருக்கிறது என்பதால் கட்டுப்படியான விலைக்கு பேசப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : நெய்வேலியில் மின்சக்தி வாங்கினாலும் அவற்றை செலவழிப்பதற்கு வழியில்லை. நம்மை நம்பி மின்சக்தி உண்டாக்கப்படுகிறது. அதற்கு அதிகப் பணம் கொடுக்க முடியாது. ஆகவே, வேறு உப தொழில்களை நெய்வேலியில் ஆரம்பித்து மின்சக்தியை உபயோகிப்பதற்கு வழியிருக்கிறதா ? அதையாவது எடுத்து ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நமது சர்க்கார் யோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அங்கிருந்து வேறு மாநிலங்களுக்கு மின்சாரம் போவதாக இருந்தாலும், இழப்பு அதிகமாக இருப்பதால், அவற்றை நாம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. நெய்வேலியில் பல சிறிய ஸ்டேட் தொழிற்சாலைகளை நிறுவி, தொழில் எஸ்டேட் வைக்கலாமா என்று ஆராயப்பட்டு வருகிறது. அதைப் பயன்படுத்தும்போது மின்சாரம் அதிகமாக எடுத்து அதிக பலன் பெற வாய்ப்பு ஏற்படும்.

[8th March 1968

THIRUMATHI **LAKSHMI KRISHNAMURTHY** : Mr. Chairman, Sir, we hear that the Andhra Government are claiming a portion of the energy produced at Neyveli, because they consider it a Centrally sponsored scheme. Why not let them take that power, which is much more expensive than the Mysore power, so that we can buy power from the Mysore Government ? The power from Neyveli can be sold profitably to Andhra.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்கள் தரும் மின்சாரத்தை நாம் எப்போதும் நம்பிக்கொண்டேயிருக்கமுடியாது. அவர்கள் எந்தக் காலத்திலும் நினைத்தால் தடுத்து நிறுத்துவார்கள். அதனால் நமக்குக் கிடைக்காமலே போகக் கூடும். ஆகையால் தேவையான அளவு எடுத்துக்கொள்ளுகிறோம். ஒரு மிலியன் போதும். இதற்கு 5 காசு என்றும் அதற்கு மேல் 4½ காசு என்றும் பேசுகிறோம். எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமிருப்பதால், தேவையான அளவுக்கு எடுக்கலாம் என்ற நிலையிலிருக்கிறோம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அமைச்சர் அவர்கள் நெய்வேலியிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் பூராவும் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கு நாமே எடுத்துக்கொள்ளவேண்டிய நிலையிலிருப்பதால் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். தினந்தோறும் மத்திய சர்க்கார் பெரிய தொழிற்சாலைகளை, ஹெவி இன்ஜினியரிங் கார்ப்பரேஷனைப் பற்றிச் செய்திகளை நாம் பார்க்கிறோம். அவை நஷ்டத்திற்கே ஓடுகிறவை போலத் தோன்றுகின்றன. சீக்கிரத்தில் இங்கே Auxill ary industries-களை ஆரம்பிக்கலாம். இப்போது லாபம் வருகிற சூழ்நிலை இல்லாததால் மைசூரில் 5 காசுக்கு ஒரு மிலியன் யூனிட் கிடைக்கும்போது நாம் ஏன் அதற்கு 7 காசுகள் கொடுக்கவேண்டும். அப்படியிருந்தால் அதை Subsidise செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு யோசனை சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்கள் 7 காசு கேட்கிறார்கள். நாம் 5·2 என்ற முறையில் பேசுகிறோம். அவர்களுக்கும் நமக்கும் கட்டுப்படியாகும் நடுத்தர நிலைமை வரவேண்டுமென்ற முறையில் தான் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. நீர் மின்சாரத்தைப் பார்த்தால் 1½, ¾ காசு தான் வரும். எல்லாவற்றையும் பார்த்து மொத்தத்தில்— கணக்குப் போடவேண்டும். மைசூரில் சாராவதி திட்டம் வந்ததால், மின்சாரம் அதிகமாக உற்பத்தியாகிறது. 4½ காசுக்கு கொடுப்பதற்கு இப்போது முன் வருகிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன், ஒப்பந்தம் செய்ததால், நமக்கும் தேவை அதிகமாக இருந்தது. அப்போது 9 காசு அளவுக்கு கொடுக்கவேண்டியிருந்தது நாம். இப்போது நமக்கும் உற்பத்தி அதிகமாகி, அவர்களுக்கும் அதிகமாகி இருப்பதால், இன்னும் கொஞ்சம் குறைக்கலாமா என்று பார்க்கிறோம். 4 காசுக்கு ஆரம்பித்து 4½ காசு என்று இப்போது இருக்கிறது. மொத்தத்தில் எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து, சராசரி மட்டத்தில் நமக்கு கட்டுப்படியாகும் நிலையில் தான் அவை அமைக்கப்படும்.

Detention of train.

* 215 *Q*—THIRU **N. R, THIAGARA7AN** : Will the Hon. the Minister for Education and Industries be pleased state—

(*a*) whether the studente of the Annamalai University detained any train recently ;

(*b*) the reason therefor ; and

(*c*) whether the Government will address the Railway Board for changing the timings so as to enable the students to reach their college in time.